# பணி ஓய்வு வாழ்த்து!



சிங்காரச் சென்னையிலே பிறந்து வளர்ந்தாலும்,
தங்குதடையின்றித் தமிழ்பேசும் முறையறியார்!
சுங்கத்துறைதனிலே அவரறியாத முகமில்லை!
வங்கக் கடலலையும் வாழ்த்தியவர்ப் புகழ்பேசும்!

நீதிக்கட்சியிலே சில பீட்டியார் தாமுண்டு;
ஆதிப் புறநகராய்ப் பிறந்தத் 'தி' நகர் ராயரும்,
மூதூர் மதுரையின் பீட்டி ராஜனும் போல்,
மேதினியில் புகழ்சூழச் சுங்கத்திலும் **பீட்டிராவ்!**

மூளும் கேள்விகள் யாவுக்கும் விடையுண்டு,
ஆளாதத் துறையில்லை எங்கள் சுங்கத்தில்!
நாளும் அவரைத் தேடாத நண்பரில்லை!
மாளாத அறிவுசெய்யும் ஆற்றலுண்டங்கு!

வரலாற்றுப் பதிவைப்போல், வகையாகத் தகவலுண்டு!
விரலசைவில், சுழலுவதாய் அறிவைச் செய்வார்!
கரங்கோத்து நிற்பார்க்கு மனம்; நிறைவெய்தும்!
அரங்கம் போல் நண்பருண்டு அவருக்கெப்போதும்!

செப்பும் தாய்மொழியில், சென்னையின் பதிவிருக்கும்!
தப்பாத நினைவாற்றல், தடையின்றி வெளியாகும்!
அப்பப்பா; ஆண்டுகள் உருண்டோட, பணிநிறைவு!
செப்பப்பா பணி ஓய்வும் சீரானப் புதுவாழ்வே!

தித்திக்கும் பொழுதாகத் திகழல் வேண்டும்!
முத்தாக மக்கள் வாழ்வுச் சிறக்க வேண்டும்!
சொத்தாகப் பிணியில்லா நிலைவேண்டும்!
எத்திக்கும் நிறைந்தானை வேண்டி வாழ்த்துவேனே!

அன்புடன்,

**கு.ப. அசோகன்**, 28-11-2019